# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • பிப்ரவரி 6, 2021 Weekly E-paper • February 6, 2021




## தமிழர்களின் உணர்வுகளைச் சீண்டாதீர்கள்!

### அம்பேத்கரை ஏற்றுப் பெரியாரை எதிர்க்கும் அரசியல் பின்னணி ?

மருத்துவர் தாயப்பன், மதிவதனி

### களவாடப்படும் கல்வி உரிமை!

தலையங்கம்

### யாருக்கானது 2021-22 நிதிநிலை அறிக்கை?

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • பிப்ரவரி 6, 2021 Weekly E-paper • February 6, 2021


## தமிழர்களின் உணர்வுகளைச் சீண்டாதீர்கள்!



**சுப. வீரபாண்டியன்**

தமிழகத்தின் ஆளுநர், பேரறிவாளன் உள்ளிட்ட எழுவரையும் விடுதலை செய்யும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்குத்தான் இருக்கிறது என்று தெரிவித்திருப்பது ஒட்டு மொத்தத் தமிழனத்தை, மனித உரிமையை, ஜனநாயகத்தை, சட்டத்தை, அனைத்தையும் இழிவுபடுத்துவதாக, கொச்சைப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

ஆளுநர், பேரறிவாளன் உள்ளிட்ட எழுவரை விடுதலை செய்யும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்குத்தான் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார். அந்த அடிப்படையில் நீதிமன்றத்தில் 9-2-2021 அன்று அந்த வழக்கு மறுபடியும் வருகிறது. நீதிமன்றத்தில் அந்த வழக்கில் தன்னுடைய பிரமாணப் பத்திரத்தை மத்தியஅரசு பதிவு செய்திருக்கிறது. அதில் "விடுதலை செய்கிற அதிகாரம் குடியரசுத் தலைவருக்குத்தான் இருக்கிறது என்று ஆளுநர் கடந்த 25-ஆம் தேதியே சொல்லிவிட்டதாகக்" கூறப்பட்டிருக்கிறது.

கடந்த 30ஆம் தேதி தமிழக முதலமைச்சர் ஆளுநரிடத்தில் மனு அளித்து எழுவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அப்போது ஏன் ஆளுநர் எதையும் சொல்லவில்லை? அல்லது ஆளுநர் சொன்ன எதையும் ஏன் முதலமைச்சர் சொல்லவில்லை?

இங்கே முதலமைச்சருக்கு எந்த மரியாதையும் இல்லையா? அந்த மரியாதையை முதலமைச்சர் காப்பாற்றிக் கொள்ளவில்லையா? முதலமைச்சர் என்ற தனிமனிதருக்கு இல்லை, ஒட்டுமொத்தத் தமிழக மக்களுக்கும் இது அவமானம்.

அதிகாரம் குடியரசுத்தலைவரிடம் இருக்கிறது என்றால், நான்கைந்து நாட்களுக்குள் இதனை ஆளுநரே முடிவு செய்துவிடலாம் என்று நீதிமன்றம் சொன்னதே, அப்படியென்றால் நீதிமன்றம் சட்டத்தைப் பார்க்காமல் சொல்கிறதா?

ஆளுநருக்கு அதிகாரம் உண்டு என்று நீதிமன்றம் சொன்னது பிழையா? அல்லது எனக்கு அதிகாரம் இல்லை என்று ஆளுநர் சொல்கிறாரே அது பிழையா?

கொல்லப்பட்டவர் ஒரு நாட்டின் பிரதமரென்பதால் நான் முடிவெடுக்க முடியாது என்கிறார் ஆளுநர். இது என்ன கூத்து? ஒரு குற்றம் என்ன என்பதைப் பார்த்துத்தான் வழக்கும் தீர்ப்பும் இருக்க வேண்டுமே தவிர, அந்தக் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர் யார் என்பதைப் பொறுத்துத் தீர்ப்பு மாறுமா? யாராவது ஒரு சாதாரண மனிதர் கொல்லப்பட்டாரென்றால் அதற்கு ஒரு தீர்ப்பு, கொல்லப்பட்டவர் பெரிய மனிதரென்றால் வேறு தீர்ப்பு என்று சொன்னால் இது ஜனநாயக நாடுதானா?

இதே ஆளுநர் சென்ற ஆண்டு, தருமபுரியில் பேருந்து எரிப்பு வழக்கில் மாணவியர் துடித்து இறந்து போனார்களே, அந்த வழக்கில் அனைவரையும் விடுதலை செய்யவில்லையா?

இப்போதும் அரசியலமைப்பின் 161-வது பிரிவின்படி தமிழக அரசுக்கு அதிகாரம் உண்டு என்று சொன்னால் அந்த அடிப்படையிலேதான் 2018 செப்டம்பர் 9ஆம் தேதி ஒரு தீர்மானத்தை ஒரு மனதாக, சட்டப்பேரவையில் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியது அரசு. அப்போதே அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

இரண்டரை ஆண்டுகள் எதுவும் நடைபெறவில்லை. இப்போது தனக்கு அதிகாரம் இல்லை என்று ஆளுநர் சொன்னால் என்ன நியாயம்?

இப்போதும் தமிழக அரசு இரண்டாவது முறை அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பினால் ஆளுநர் கையெழுத்திட வேண்டும் என்பதுதான் சட்டம். எப்படி?

குடியரசுத் தலைவராக இருந்த இராஜேந்திர பிரசாத் அவர்கள் பிரதமரோ அமைச்சரவையோ அனுப்புகின்ற எல்லாவற்றையும் நான் ஏற்க வேண்டியதில்லை என்று சொன்னபோது, ஒருமுறை வேண்டுமானால் திருப்பி அனுப்பலாம். ஆனால், இரண்டாவது முறையும் அமைச்சரவை அந்தத் தீர்மானத்தை வலியுறுத்தி அனுப்பினால் குடியரசுத் தலைவர் ஏற்றாக வேண்டும் என்றுதானே விதி ஏற்படுத்தப்பட்டது.

அந்த விதி குடியரசுத் தலைவருக்குப் பொருந்துமானால் ஆளுநருக்கும் பொருந்தும்தானே?

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற மு.க.ஸ்டாலின் "அவர்களை விடுதலை செய்ய வேண்டும்" என்று மிக அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார். இது தமிழனத்திற்கு மட்டும் விடப்பட்டிருக்கிற அறைகூவல் இல்லை. இது மனித நேயத்திற்கும் ஜனநாயக அமைப்புக்கும் விடப்பட்டிருக்கிற அறைகூவல்.

காத்திருக்கிறது தமிழகம். உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் காத்திருக்கிறோம். தமிழர்களைத் தொடர்ந்து அவமதிக்காதீர்கள். தமிழர்களின் உணர்வுகளைச் சீண்டாதீர்கள். தமிழகம் பொங்கி எழுந்தால் அதன் விளைவுகளைத் தமிழக அரசு சந்திக்க வேண்டி வரும்.

●

# அம்பேத்கரை ஏற்றுப் பெரியாரை எதிர்க்கும் அரசியல் பின்னணி ?

## ● மதிவதனி



அண்ணல் அம்பேத்கரை ஏற்றுக்கொள்வது போல் பாசாங்கு காட்டும் இந்துத்துவவாதிகள் என்பதே சரியானதாக இருக்கும்.

தந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் தீவிர ஜாதி ஒழிப்புப் போராளிகள், மத எதிர்ப்பாளர்கள்,கடவுள் மறுப்பாளர்கள், மூடநம்பிக்கை எதிர்ப்பாளர்கள். அனைத்திற்கும் மேலாகக் கடுமையாகப் பார்ப்பனியத்தை எதிர்த்தவர்கள்.

இப்படி அனைத்து நிலையிலும் இந்துத்துவவாதிகளுக்கு எதிராக இருந்த இருவரில், ஒருவரை மட்டும் ஏற்றுக்கொண்டு மற்றொருவரை எதிர்ப்பது என்பதில் இருக்கும் ஆபத்தான அரசியலை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதற்குப் பின்னணியில் இருக்கும் அரசியல் என்பது ஓட்டு அரசியல் தான்.

அண்ணல் அம்பேத்கர் என்னும் அனைவருக்குமான ஒரு தலைவரை, தலித் மக்களுக்கு மட்டுமான தலைவராகப் பிம்பப்படுத்தி, தங்களுக்கான தலைவர்தான் அம்பேத்கர் என்று நம்பும் தலித் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கும், அம்மக்களிடம் இவர்களும் நமக்கானவர்கள்தான் என்ற பொய் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும், திட்டமிட்டு அம்பேத்கரை ஏற்றுக்கொள்வது போல் போலி அரசியல் செய்கின்றனர்.

இந்த ஆபத்தினைப் புரிந்துகொள்ள மறுக்கும் வட இந்தியாவில் சில தலித் அமைப்பின் கட்சித் தலைவர்களும் இந்துத்துவவாதிகளின் இந்த வாக்கு வங்கி அரசியலுக்குத் துணை போவதும் பெரிய ஆபத்தே. "கெடு வாய்ப்பாக இந்துவாகப் பிறந்துவிட்டேன்,ஒருபோதும் இந்துவாகச் சாகமாட்டேன்" என்று சொன்ன ஒரு தலைவரை இந்து இராஜ்ஜியம் அமைக்க விரும்பும் பாசிசவாதிகள் எப்படிக் கொண்டாட முடியும்?

அவர் சிலைக்கு மாலை அணிவிக்கும், அவர் பிறந்தநாளைக் கொண்டாடும், இதே இந்துத்துவவாதிகள் அம்பேத்கர் சிலைகள் உடைபடும்போது வீதிக்கு வந்து போராடியிருக்கிறார்களா? ஒருபுறம் அம்பேத்கரை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, மற்றொரு புறம் அவர் எழுதிய அரசியலமைப்புச் சட்டத்தையே மாற்றி அந்த இடத்தில், மக்களை ஜாதியாகப் பிரிக்கும் மனுதர்மத்தை வைக்கத் துடிப்பதுதான் இவர்களின் அரசியல். பொதுவாகவே எதிர்த்து அழிக்க முடியாதவற்றை, அணைத்து அழிப்பதே இந்துத்துவவாதிகளின் செயல்.

இந்து மதக் கடவுளை வணங்க மாட்டேன், பார்ப்பனீய மதம்தான் இந்து மதம், இரண்டுக்கும் வேறுபாடு ஒன்றுமில்லை, பார்ப்பனர்கள் செய்யும் சடங்குகள் எதிலும் நான் ஈடுபட மாட்டேன் என்று சொல்லி புத்தத்தைத் தழுவிய அண்ணல் அம்பேத்கரை, இந்துத்துவ அம்பேத்கராகக் கட்டமைக்க முயற்சிப்பது என்பது அவர்களின் சூழ்ச்சி அரசியல்.

பார்ப்பனீய எதிர்ப்பில் பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட மக்களின் ஒற்றுமை அவசியம் என்று சொன்ன தலைவரை 'தலித் மக்களுக்கு மட்டுமான தலைவராகக்' கட்டமைத்து, பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரித்தாளும் சூழ்ச்சி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இந்துத்துவ அமைப்புகள், கட்சிகளின் வாக்கு வங்கி அரசியலை மக்கள் புரிந்து கொண்டு, தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

## ● மருத்துவர் தாயப்பன்



கேள்வியே தவறு. அவர்கள் எந்தக் காலத்திலும் டாக்டர் அம்பேத்கரை 'ஏற்றுக்' கொண்டது இல்லை. ஏற்றுக் கொள்ளவும் முடியாது. *Acceptance* (ஏற்றுக் கொள்வது) என்பது வேறு; தன்வயப்படுத்துவது (*Appropriation*) என்பது வேறு. ஆதாயங்களுக்காக 'என் ரத்தத்தின் ரத்தமே' என்று மற்றவரைத் தன்னோடு இணைத்துக் கொள்ளலாமே தவிர அவருடைய ரத்தத்தைத் தனக்குள் ஏற்றிக்கொள்ளமுடியாது. *Cross react* ஆகிவிடும். உயிர் போய்விடும்.

பார்ப்பனீயத்தின் பண்பாட்டு வடிவம் (*cultural form*) இந்து மதம். இந்து மதத்தின் அரசியல் வடிவம் (*political form*) இந்திய தேசியம் (*nationalism*). இந்தியாவின் ஒருமித்த சமூக வாழ்விற்கு (*coexistence*) எதிராக இருப்பவை மேற்சொன்ன பார்ப்பனீயம் - இந்துமதம் - இந்திய தேசியம் என்பதை ஆழமாக உணர்ந்து அவைகளை வேரோடு அழித்தொழிப்பதையே இலக்காகக் கொண்டு செயல்பட்டவர்கள் மூவர். மகாத்மா பூலே, டாக்டர் அம்பேத்கர், அய்யா பெரியார். உங்கள் கேள்வியில் விட்டுப்போன செய்தி, அவர்கள் பெரியாரை மட்டுமன்று, பூலேவையும் தன்வயப்படுத்த முயற்சிப்பதில்லை. அதற்கான எளிமையான, எல்லோருக்கும் தெரிந்த விடை, பெரியாரையோ பூலேவையோ தன்வயப்படுத்தவில்லை என்பதற்காக அவர்களுக்கு எந்த இழப்பும் இல்லை. ஆனால் டாக்டர் அம்பேத்கரைத் தன்வயப்படுத்துவதனால் கிடைக்கும் ஆதாயங்கள் பல. 1. ஓட்டு; 2. *Demographic majority* – க்காக தலித்துகளை இந்துக்களாக இணைத்துக் கொள்வது; 3. '*So called*' அறிவுத் தளத்தில் பெரியாரை டாக்டர் அம்பேத்கருக்கு எதிராக நிறுத்துவது.

இந்த விடையை விவாதிப்பது அன்று நம்முடைய நோக்கம்; கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய கேள்வி: டாக்டர் அம்பேத்கரைத் தன்வயப்படுத்திக் கொள்ளும் துணிச்சல் அவர்களுக்கு எப்படி வந்தது? அதற்கான *space* அவர்களுக்கு யார் கொடுத்தது?

டாக்டர் அம்பேத்கரை எந்த அளவிற்கு நாம் உள்வாங்கி இருக்கிறோம்? அவரைப் பற்றிய இரண்டு செய்திகளை மட்டுமே நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். 1. தலித்துகளின் தலைவர் 2. அரசியல் சட்டம் எழுதியவர். அரசியல் சட்டம் எழுதியதை விட்டுவிடுவோம், அவர் தலித்துகளின் தலைவர் மட்டும்தானா ? டாக்டர் அம்பேத்கர் என்ற ஆகப்பெரும் ஆளுமையின் பல பரிமாணங்களில் ஒன்றுதான் அவர் தலித்துகளுக்காகப் போராடினார் என்பது. அவருடைய ஒற்றை இலக்கு ஜாதியை அழித்து ஒழிப்பது, அதற்கு மூலமாக இருக்கும் இந்து மதத்தை அழித்து ஒழிப்பது. டாக்டர் அம்பேத்கரின் எழுத்துக்களாக நூல் வடிவில் நமக்கு கிடைத்திருப்பவை மொத்தம் 56. அதில் சனாதன இந்து மதத்திற்கு எதிராகவும், அதன் வேரான பார்ப்பனீயத்திற்கு எதிராகவும் அவர் எழுதிய நூல்கள் 37. அந்த 37-இல் சூத்திரர்களுக்காக மட்டும் எழுதிய நூல்கள் ஒன்பது. தீண்டத்தகாத மக்களுக்காக அவர் எழுதிய நூல்கள் வெறும் 6. ஆப்பிரிக்க – அமெரிக்க எழுத்தாளர் *Isabel Wilkerson* தன்னுடைய *Caste* என்னும் நூலில் டாக்டர் அம்பேத்கரை இப்படி அறிமுகப்படுத்துகிறார், *The Father of the Anti-caste movement in India. Dalit movement* என்று எழுதவில்லை.

எந்தப் பார்ப்பனீயத்தை ஒழித்துக் கட்டுவதற்காகத் (*annihilate*) தன் வாழ்நாள் முழுக்கப் போராடினாரோ அதே

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## களவாடப்படும் கல்வி உரிமை!

பாசிச பாஜகவின் மத்திய அரசிடமிருந்து நீதி, நேர்மை, நாணயம் போன்றவைகளை எதிர்பார்ப்பது தவறுதான். என்றாலும் அரசு என்பது மக்களுக்கானது என்பதால் நீதி கேட்டு மக்களின் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

மத்திய பாசிக - பாஜக அரசு மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதிலும், குறிப்பாகத் தமிழ் மொழியை, தமிழக வளத்தை அழிப்பதிலும் மிகக்குறியாக இருக்கிறது. ஆனால், பார்ப்பன நலத்திற்கு எந்த ஊறும் செய்வதில்லை.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் உயர்சாதிக்கான (பார்ப்பனர்) 10 % இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தும் அதே வேளையில் பிற்படுத்தப்பட்டோருக்கான 69 % இடஒதுக்கீட்டை நிறுத்திவிட்டது. இது சூத்திரர்கள் மீது நடத்தப்படும் மிகப்பெரிய தாக்குதலாகக் கருதவேண்டியிருக்கிறது.

அதே பல்கலைக்கழகம் எம்.டெக் போன்ற உயர் கல்வியையும் ரத்து செய்திருக்கிறது. இந்த நடைமுறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக் கழகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட இருக்கிறது.




ஏழை மாணவர்கள் உயர்கல்வி பெற்று விடக்கூடாது, அதாவது பார்ப்பனர்களைப் போல அல்லது அவர்களுக்கு இணையாக இவர்கள் உயர்ந்துவிடக்கூடாது என்பதை இது உணர்த்துகிறது.

தமிழ்நாட்டில், தமிழக மண்ணில், தமிழ்மக்களின் வரிப்பணத்தால் கட்டப்பட்ட பல்கலைக்கழகங்களின் மாநில உரிமையை மத்திய அரசு வலுக்கட்டாயமாகப் பறிக்கிறது.

இந்த செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. ●




2ஆம் பக்கத் தொடர்ச்சி

டாக்டர் அம்பேத்கரை அவரைப் பற்றிய நமது அறிவுப் போதாமையின் காரணமாகத்தான் அதே பார்ப்பனீயம் தன்வயப்படுத்தப் பார்க்கிறது. வெளிப்படையாகச் சொன்னால், நாம் ஒரு *Ambedkar illiterates.*

தந்தை பெரியாரின் மதம், ஜாதி ஒழிப்பு தொடர்பான உரையாடல்கள் வெகுமக்கள் மொழியில் அமைந்தவை. தவிர திராவிட இயக்கங்களும் அவைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திருக்கின்றன. அதே தளத்தில் இயங்கிய டாக்டர் அம்பேத்கர் தன்னுடைய உரையாடல்களைக் கல்விப்புலம் சார்ந்த *academic* மொழியில் செய்தார். அவைகளை உள்வாங்கிக் கொள்ள சற்று மெனக்கெடல் வேண்டும். கவனம் வேண்டும். அந்த கவனமும் மெனக்கடலும் நம்மிடையே இல்லாத காரணத்தினால்தான் டாக்டர் அம்பேத்கரைச் சிறு மேற்கொள்களோடும் அடைமொழிகளோடும் சுருக்கிக் கொண்டோம். அந்தக் கோடிட்ட இடத்தைத்தான் இந்துத்துவவாதிகள் நிரப்பிக் கொள்கிறார்கள்.

இது ஒன்றும் நமக்குப் புதிதன்று. அன்று புத்தரை புரிந்துகொள்ளத் தவறினோம். அவரை ஒன்பதாவது அவதாரமாக்கினார்கள். இன்று டாக்டர் அம்பேத்கரைப் புரிந்துகொள்ளத் தவறுவோமேயானால், இருக்கவே இருக்கிறது பத்தாவது அவதாரம். அவர்களுக்கு என்ன காசா? பணமா? வெட்கமா? மானமா?

*(வெற்றிச்செல்வன்)* ●

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# யாருக்கானது 2021–22 நிதிநிலை அறிக்கை?

● சாரதாதேவி




இந்திய ஒன்றியத்தின் 2021 - 22 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கை பிப்ரவரி 1 அன்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. திருமிகு. நிர்மலா சீதாராமன் அவர்கள் எண்மின் (digital) முறையில் தாக்கல் செய்த முதல் பட்ஜெட் என்று பெருமை பட்டுக்கொண்ட இந்த அறிக்கை சுமார் 34.52 லட்சம் கோடி ரூபாய்களை இந்த நிதி ஆண்டுக்குச் செலவு செய்யப்போவதாக அறிவிக்கிறது.

ஒரு மக்கள் நல அரசு, தன் நாட்டு மக்கள் தொகைக்கும், பல்வேறு பொருளாதார, சமூக, அரசியல் நிலைகளில் வாழும் மக்கள் பிரிவுக்கு ஏற்ப வருவாயை யாரிடம் எவ்வளவு, எவ்வாறு எனத் திட்டமிட்டு எப்படி இயற்றும், அவ்வாறு இயற்றியதை எம்முறைகளில் நேர்முக, மறைமுக வரிகளாகவும் அல்லது மாற்று வருமானமாக ஈட்டும், அவ்வாறு ஈட்டியதை சிந்தாமல் சிதறாமல், சேதாரம் இன்றிக் காத்து, அதை யாருக்கு, எதற்கு எவ்வளவு, எப்போது என வகுத்துச் செலவு செய்யும் என்பதை ஆண்டு அறிக்கையாகத் தாக்கல் செய்வது அரசின் கடமை. மக்களாட்சி மலராத மன்னராட்சிக் காலத்திலேயே இதை அவ்வளவு தெளிவாக “இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு” என்று சொல்லி வைத்தார் நம் பேராசான் வள்ளுவப் பெருந்தகை.

அந்தக் குறளை மட்டும் கிளிப்பிள்ளையைப் போல வாயால் உதிர்த்துவிட்டு அதன் சாரத்தை நடைமுறையில் சிதைத்துப் போட்டிருப்பதே இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் சாதனை.

கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டு ஓர் ஆண்டு கடந்த நிலையில், இந்நாட்டில் பெரும்பான்மையாக இருக்கும் மக்கள் தம் வேலைகளை இழந்தும், வீடுகளில் குறைவான ஊதியத்துக்குப் பணி செய்தும், வேலையின்றி வருமானமும் இன்றி சொந்த ஊர்களுக்குத் திரும்பியும், உயிர் பிழைத்து வருகின்றனர். மறுபக்கத்தில் பெருந்தொற்றுக் காலத்தில் 138 கோடி மக்களில் 100 க்கும் கீழான பெரும் பணக்காரர்களின் வருவாய் மட்டும் 35% அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அரசு, உயிர் மட்டுமே பிழைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு போய்ச் சேர வேண்டிய நூறு நாள் வேலைத் திட்டத்தின் செலவை, ரூ.42000 கோடி வரை இந்த ஆண்டுக்குக் குறைத்திருக்கிறது. இது கிட்டத்தட்ட 40% சென்ற ஆண்டை விடக் குறைவான ஒதுக்கீடு. ரூ..1.15 லட்சம் கோடி செலவு செய்தபோதே 45 நாள்களுக்கு மட்டுமே குடும்பத்தில் ஒருவருக்கு பணி உறுதி கிடைத்தது என்று பொருளாதார நிபுணர் அருண்குமார் தெரிவிக்கிறார்.

பள்ளிக் கல்விக்கு, சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.5000 கோடியைக் குறைத்துள்ளது. அரசுப் பள்ளிகளில் ஏற்கனவே ஆசிரியர் பற்றாக்குறை, கட்டுமானச் சிதைவு என பல்வேறு சிக்கல்கள் இருக்கும்போது, கல்விக்கான நிதிக் குறைப்பு பள்ளிக் கல்வியை முற்றிலுமாகச் சிதைத்து, புதிய கல்விக் கொள்கை வழி தனியார் கொழிக்கும் தொழிலாக மாற்றப்போவதைத் தான் இந்த அறிக்கை தெளிவுபடுத்துகிறது.

நல்ல லாபம் ஈட்டி, பொது மக்களுக்கு உற்ற காப்பீட்டுப் பாதுகாப்பு நண்பனாகவும் இயங்கி வரும் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் பங்குகளை 74% வரை விற்கும் முடிவை இந்த அறிக்கையில் வெளியிட்டுள்ளார்கள். அது போன்று பல அரசு நிறுவனங்களின் பங்குகளை விற்கப்போகிறார்கள். அறிக்கையின் பின்பக்கங்களில் அந்தத் துறையின் சீரமைப்புக்கும் விரிவாக்கத்திற்கும் செலவு செய்வதாக அறிவித்துவிட்டு, முன் பக்கங்களில் அந்தத் துறையை விற்கப்போவதாக அறிவிப்பு. மக்கள் பணத்தில் பழுதுபார்த்து, தன் பணக்கார முதலாளிகளுக்கு அந்தச் செலவைக் கூட வைக்காமல் தாரை வார்க்கும் பண்பு என்னே!

ஆளும் பா.ஜ.க அரசு வந்தவுடன், பெருமுதலாளிகள் செலுத்திய வரியை 10% வரை குறைத்த பெருந்தன்மை என்ன?! அதனாலும் பல்வேறு தள்ளுபடிகளாலும் 35% வரை அதிகப்படியாக நிறைந்து போன அவர்களின் கல்லாப்பெட்டிகள் சிறிதும் குறையாமல் அவர்கள் மீது ஒரு துளி சுமையையும் ஏற்றாத பக்குவம்தான் என்ன?! ஆனால், 50க்கும் 100க்கும் பெட்ரோலுக்கும் டீசலுக்கும் நிற்கும் சாமானியனிடம் ஜேப்படி நடத்திப் பொருளாதாரத்தை மீட்க நினைக்கும் குரூரம்தான் என்ன?

பொருளாதார மந்தச் சூழலில், மக்களின் வாங்கும் திறத்தை உயர்த்த நோக்கமற்ற இந்த அரசு, தங்கள் வாகனத் தொழிலதிபர்களுக்கு வசதியாக அவசரமாக இந்த நிதி நிலை அறிக்கையிலேயே 15 ஆண்டுகள் கடந்த தொழில் வாகனங்களும், 20 ஆண்டுகள் கடந்த சொந்த வாகனங்களும் உடைக்கப்படவேண்டும் என்ற திட்டத்தை முன்வைக்கிறது. அதை ஓரிரண்டு ஆண்டுகள் தள்ளிப்போட்டால் கொஞ்சம் மூச்சுவிட்டுக்கொள்ள சிறுகுறு தொழில்முனைவோருக்கு வாய்ப்பாகிவிடுமோ?

இந்த நிதிநிலை அறிக்கை முழுக்க முழுக்க மோடிக் கூட்டத்தை அரசு நாற்காலிகளில் உட்கார வைக்க ஒத்துழைத்த பெருமுதலாளிகளுக்கானதே அல்லாமல் கிஞ்சித்தும் எளிய மக்களுக்கானது இல்லை! எளிய மக்களின் வலியை இந்த அரசுக்குப் புரியவைக்க வேண்டுமென்றால் போராட்டம் ஒன்றே அதற்கான மொழி! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,